செய்தி வெளியீடு எண்:764 நாள்:22.09.2021

<u>செய்தி வெளியீடு</u>

**மதிமுக பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.வைகோ அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி.**

திராவிட இயக்கத்தின் போர்வாளாகவும் - நாடாளுமன்றத்தில் தனது விவாதங்களால் நடுங்க வைக்கும் அனலாகவும் - கொண்ட கொள்கைக்காக இடைவிடாத போராளியாகவும் வலம்வரும் என் ஆருயிர்ச் சகோதரர் வைகோ அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

அவரது சொல்லும் செயலும் நூறாண்டுகள் தொடர வாழ்த்துகிறேன்! என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக வலைதளங்கள் வாயிலாக திரு.வைகோ அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வைகோ அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தார்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9